கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

சித்திரை மாத இதழ்
NEWS BULLETIN
APRIL 2024
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

.

நாள்	நிகழ்வு
2002 முதல் 22 ஆண்டு களாக	கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக பாடசாலை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 38-44 Binley Road, Coventry CV3 1JA எனும் முகவரியில் நடைபெற்று வருகின்றது
15,22/ 06/24	பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் பேச்சுப் பரீட்சை
29/06	பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் கேட்டல், எழுதுதல், வாசித்தல் பரீட்சைகள்

SATURDAY	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	10.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	10.00am – 2.00pm
Tamil	10.00am – 12.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D)	10.00am – 12.00am







ஈகைத் திருநாள் "ஈதுல் பித்ர்" (நோன்பு பெருநாள்)

உலகமெங்கும் சாந்தியும், சமாதானமும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தும் உன்னத நாளான "ஈதுல் பித்ர்" எனும் நோன்பு பெருநாளை உலகில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் கடந்த 10ஆம் திகதி அன்று கொண்டாடி மகிழ்ந்தனர்.

இது இஸ்லாமிய மாதங்களில் ஒன்பதாவது மாதமான "ரமழான்" மாதம் முழுவதும் நோன்பு நோற்று, அடுத்து வரும் "ஷவ்வால்" மாதத்தின் முதல் நாளன்று கொண்டாடப்படுகின்றது.

"விசுவாசிகளே! நீங்கள்
இறையச்சம் பெறும் பொருட்டு
உங்களுக்கு முன் சென்றவர்கள் மீது
விதியாக்கப்பட்டது போன்று
உங்கள் மீதும் நோன்பு
கடமையாக்கப்பட்டு இருக்கின்றது."

(அல்குர்ஆன்)

என்ற குர்ஆன் வசனத்திற்கேற்ப வருடத்தில் உள்ள 11 மாதங்களிலும், மனிதன் தனது தொழில், தனது வேலைகள் என லௌகீகத்தில் முற்று முழுதாக மூழ்கிக் கொண்டிருக்கும்போது, ஆத்மீக உணர்வுகள் குன்றி, லௌகீகம் மேலோங்கி விடுவது இயல்பே. இவ்வேளை ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்பதனால் ஆத்மீகம் அதிகரிக்கின்றது.

இறையச்சம் மேலோங்குகின்றது. இஸ்லாம் ஒரு வாழ்க்கை முறையாகும். அந்த வாழ்க்கை முறைக்கான பயிற்சியை நோன்பு வழங்குகிறது. சரியான முறையில் நோன்பு நோற்பதன் மூலமாக, இனிய குணம், பொறுமை, நன்னடத்தை, சகிப்புத்தன்மை, கற்புடமை, உளத்தூய்மை ஏழைகளின் துயரை உணரும் தன்மை, உதவும் மனப்பான்மை, மனிதநேயம் என்பன போன்ற பல்வேறு நற்பண்புகளை ஒருவர் அடைந்து கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

மேலும் ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்றவர்கள் தமது நோன்பைப் பூரணப்படுத்த "ஸாக்கத்துல் பித்ர்" எனும் கட்டாய ஈகையை நிறைவேற்ற வேண்டும். ஏனெனில் இவ் "ஈதுல் பித்ர்" ஈகத்திருநாளில் இப் பிரபஞ்சத்தில் எந்தவொரு முஸ்லிமும் பட்டினியோடு இருக்காது, உண்டு பசிதீர்த்து மகிழ்ந்திருக்க வேண்டும் என்பதே இந்த ஈகைத் தத்துவமாகும்.

இதனாலே ஈகை எனும் பொருள் கொண்ட "பித்ர்" என்ற அரபுச் சொல்லுடன், பெருநாளைக்குறிக்கும் ஈத் எனும் அரபு சொல்லும் இணைக்கப்பட்டு, ஈதுல் பித்ர்" என அழைக்கப்படுகின்றது.

இப்பெருநாள் தினத்தில், முஸ்லிம்கள் அனைவரும் புத்தாடை அணிந்து, நறுமணம் பூசிக்கொண்டு, எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, தோளோடுதோள் பட எவ்வித வேறுபாடுகளும் இன்றி, இறைவனை வணங்குவார்கள்.

அதன்பின் சந்திப்பவர் எல்லோருக்கும் "ஸலாம்" சொல்வதும், உறவினர்கள் நண்பர்களின் நலம் விசாரிப்பதும், முடியுமானவரை ஏழைகளுக்கும் ஈகையும் செய்து மகிழ்வார்கள். இதுவே ஈகைத் திருநாளாகும்.

இப்புனித நாளில் உலகவாழ் அனைத்து மக்களும் சாந்தியும், சமாதானமும், சமத்துவமும் பெற்று வாழ வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


"ஈத் முபாறக்"

நன்றி

திருமதி பாயிஷா அபுசாலி

தமிழாசிரியை.





ஈழத்துப் புலமைகள் (பாகம் 19)

கடந்த இதழிலே :

தென் கோவையூர் இருபாலை சேனாதிராய முதலியார் பற்றி பார்த்திருந்தோம்.அதன் தொடர்ச்சியே இது.

" நத்தமுருங்கயத்தால் நன் கிளைகொள் பாடலத்தால்
சித்தச வேள் போலுந்திரு நல்லை- முத்தின்
திருத்தணி மாமலையுந் தின் கோட்டிற்காட்டும்
திருத்தணி மாமலையான் சேர்வு".

இப்பாடலையும் பல்பொருள்தரும் சிலேடையாகவே படியுள்ளமை காணலாம்.

நத்தம்- இருள் அல்லது சங்கு, கயம்- யானை அல்லது குளம். கிளை - கிள்ளை (கிளி) அல்லது கொம்பு. பாடலம் - குதிரை அல்லது பாதிரி மரம்.

இவர் பாடிய நல்லைக்குறவஞ்சியிலும் ஒரு வெண்பாவைப்பார்ப்போம்.

"திருவாரு நல்லை நகர்ச் செவ்வேற் பெருமானார்
இருவாலைக்குயத்தியரோடின்ப முற்றாரம்மானை
இருவாலைக்குயத்தியரோடின்ப முற்றாரமாயின்
தருவாரோ சட்டி குடம் சாறுவைக்க வம்மானை
தருவர் காண் சட்டி குடம் சாறுவைக்க வம்மானை"

சில வெண்பா அடிகளின் பொருள் காண்போம்;

இருவாலைக்குயத்தியர் -இரண்டு வாலைப்பருவமுடைய மகளிர், குயம் _ ஸ்தானம்(நிலையம்) ,சட்டி - ஒரு திதி,குடம் - கும்ப மாதம்,(கர்த்திகை), சாறு - திருவிழா.

இங்கே இருவாலை என்னும் ஊரில் உள்ள குயத்தியரும்,சட்டி குடமும்,சாறும் தொனிப்பதைக்காணலாம்.

இப்பாடல் சில தசாப்தங்களுக்கு முன்,மேடைப்பேச்சிலே பிரபலமான விவாதப்பொருளாகவும்,வில்லுப்பாட்டு நிகழ்விலே பல்பொருள் தரும் வெண்பாவாகவும் ஒலித்தது குறிப்பிடத்தக்கது.

சேனாதிராயமுதலியார் மானிப்பாயிலே அச்சிடப்பட்ட "தமிழ் அகராதி"எனும் நூலையும் தொகுத்து வழங்கியவர் என்றும்,யாழ்ப்பாண உயர் நீதிமன்றிலே நீதிபதியாக பணியற்றியவரென்றும் கூறுவர்.

ஆக்கம்

திரு மாணிக்கம் தவத்துரை

ஆசிரியர்.

சித்திராப் பௌர்ணமி ஏன் சிறப்பானது?

சித்திரை மாதம் பௌர்ணமி திதியில்; சித்திரை நட்சத்திரமும் கூடி வருவருவதால் சித்திரா பௌர்ணமி என அழைக்கப் பெறுகின்றது. மாதத்தின் பெயரும் நட்சத்திரத்தின் பெயரும் ஒன்றாகி (சந்திரன் சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கையில்), சூரியன் உச்ச பலம் பெறும் மேட இராசியில் (சித்திரைமாதத்தில்) வரும் பௌர்ணமி தினம் சிறப்புப் பெறுகின்றது.

அம்பிகையின் ஆலயங்களில் "சித்திரைக் கஞ்சி" படையல் செய்வதன் மூலம் அம்பிகையின் சீற்றத்தை, கோபத்தை, தணிப்பதனால் அம்பிகையின் சீற்றத்தால் ஏற்படும் அம்மாள் வருத்தம்(கொப்பளிப்பான், சின்னம்மை போன்றவை) ஏற்பாடாது என்பது ஐதீகம். அதனால் அம்பிகை ஆலயங்களில் குளிர்த்தி பெருவிழாவாகக் கொண்டாடப் பெறுகின்றது.

எம்மைப் பெற்று, சீராட்டி வளர்த்தெடுத்த தாயாரை அவர் மறைந்த பின்பும் நன்றியுடன் நினைவு கூரும் நாளான இந்நாளில் விரதமிருந்து வழிபாடு செய்வதன் மூலம் தாயின் தூய்மையின் பெருமையை மனதிலிருத்தி அவரது ஆன்மா இறைவன் திருவடியில் அமைதி பெற இறைவனைத் தொழும் நாளாகவும் இந்நாள் அமைகின்றது. மறைந்து விட்ட தாயாரை நினைவிற் கொண்டு விரதமிருப்பதுடன் வாழ்வில் தவறுகள் தவிர்க்க நல்வழி செய்யத் தூண்டுதல் செய்யும் சித்திர புத்திரனார் விரதமிருப்பதும் இந்நாளின் சிறப்பை இரட்டிப்பாக்குகின்றது.

(இணையத்திலிருந்து)